03.11.2025.

OS.N0.376/2023

P.W.2 – திரு.ஈஸ்வரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கு எந்தெந்த சர்வே நம்பர்களுக்கு நடக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியும். அந்த சர்வே எண்கள். 99, 100, 101, 102, 103 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் வேலு சுப்பையா என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனது தாத்தா சுப்பையா. அவர் தற்போது உயிரோடு உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். வேலு என்பவரும் உயிரோடு இல்லை. மேற்படி சுப்பையாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஒரு வாரிசு. அவர் பெயர் பால்ராஜ். சுப்பையாவிற்கு தங்கம் என்ற மகள் உண்டா என்றால் உண்டு. பால்ராஜ் தற்போது உயிரோடு இருக்கிறாரா என்றால் உயிரோடு இருக்கிறார். தங்கம் என்பவர் இறந்துவிட்டார். தங்கத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால் பேச்சியம்மாள், பூமாரி, பாலசுப்பிரமணியம் ஆவார்கள். அதில்பேச்சியம்மாள் என்பவர் மட்டும் இறந்துபோனார்.பேச்சியம்மாளுக்கு வாரிசுகள் உண்டா என்றால் 3 பெண் மக்கள் உண்டு. நான் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள வேலுவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 ஆண்கள், 2 பெண்கள் உண்டு. அவர்கள் மரியசூசை, அந்தோணிராஜ் என்ற சரவணன், ஞானம்மாள், புஷ்பம். அவர்களில் ஞானம்மாள், புஷ்பம், மரியசூசை ஆகிய மூவரும் இறந்துவிட்டார்கள். அவர்களுக்கும் வாரிசுகள் உண்டா என்றால் உண்டு. அவர்கள் தற்போது உயிரோடு இருக்கிறார்கள். எனது வாக்குமூலத்தில்

கூறியுள்ள கிரைய ஆவண எண்.423/58 என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.13** ஆகும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.13 ஆவணத்தின் அடிப்படையில் வேலுசுப்பையாவின் வாரிசுகளுக்கு தாவா சொத்துக்களில் பங்குரிமை உள்ளதாக கூறுவதற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் வேலுசுப்பையாவின் வாரிசுகளுக்கு தாவா சொத்தில் பங்கு என கூறி நான் இந்த வழக்கில் கட்சியாக சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் உள்ள சர்வே எண்கள் மீனாட்சி நகர் மனைப்பிரிவாக பிரிக்கப்பட்டு பல்வேறு நபர்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த மீனாட்சி நகர்பிரிவில் கிரையம் வாங்கிய நபர்கள் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மீனாட்சி நகர் மனைப்பிரிவில் கிரையம் சம்மந்தமாக நாங்கள் எந்தவிதமான சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மீனாட்சி நகர் மனைப்பிரிவு ஏற்படுத்திய விவரம் எனக்கு 15 வருடங்களுக்கு முன்பாக தெரியும். நான் வாதி சூசை சாட்சியம் அளிக்க அழைத்தன்பேரில்நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி சூசை மீனாட்சி நகர் மனைப்பிரிவில் உள்ள மனைகளை பல்வேறு நபர்களுக்கு கிரையம் செய்துகொடுத்திருக்கிறாரா என்றால் அவர் பவர் மட்டும் தான் கொடுத்திருக்கிறார். கிரையம் கொடுத்தது எனக்கு தெரியாது. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக மீனாட்சி நகர் பிரிவில் வாதி கிரையம் செய்து கொடுத்த விவரத்தை கேட்டேனா என்றால் கேட்டேன். அவர்பவர் மட்டும் எழுதிக்கொடுத்தாக சொன்னார். தாவா சொத்துக்களின் வில்லங்க சான்றிதழ்களை பார்த்துள்ளேனா என்றால் 10

வருடங்களுக்கு முன்பாக பார்த்துள்ளேன். அந்த வில்லங்க சான்றிதழ்களில் சூசை கிரையம் கொடுத்த விவரம் துலங்கும் என்றால் பவர் பத்திரம் மூலம் கிரையம் கொடுத்த விவரம் துலங்கும். நான் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள மேல்முறையீட்டு எண். 40/2017 எந்த நீதிமன்றத்தில் யார், யார்மீது தாக்கல் செய்துள்ளது என்றால் மாரியம்மாள், மரியசூசை, அந்தோணிராஜ், பால்ராஜ், சுப்பிரமணியன், ஈஸ்வரன் ஆகியோர்கள் மீது குழந்தைசாமி, சுப்பையா ஆகியோர்கள் தாக்கல் செய்தார்கள். எந்த நீதிமன்றம் என்றால் எந்த நீதிமன்றம் என்று தெரியவில்லை. அந்த மேல்முறையீட்டு சம்மந்தமான ஆவணங்களை எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு வழக்கில் தரப்பினராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் சொல்வது போன்று மேல்முறையீட்டு வழக்கு எதுவும் இல்லைஎன்றும் அதனால் தான் அது சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் வாதிக்கு ஆதரவாக என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குழந்தைசாமிக்கு எதிராக சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 27.09.1986 பாகப்பிரிவினை ஆவணத்தை நான் பார்த்து இல்லை என்றால் நான் பார்க்கவில்லை. அந்த ஆவணத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது.

மறுவிசாரணை இல்லை.

I Additional District Judge,

Tirunelveli.